முருகப்பெருமான் துணை

**மகான் பூதத்தாழ்வார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.01.2022, திங்கட்கிழமை

1. தவமாக கலியில் சக்திதனை
தருமமாக தரணியில் நிரப்பி
அவதாரம் எடுத்த அண்ணலே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே பிலவ கலை திங்கள்
குறைவிலா சதுர்திகதி சோமவாரம்
(பிலவ வருடம் தை மாதம் 4ம் நாள், 17.01.2022 திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகனுக்கு பூதத்தாழ்வார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மைவழி காட்டும் தேசிகன்
ஞானம்தனை மக்கள் அடைந்து
ஞானியாகும் வாய்ப்புக் கனிய வேண்டி
4. வேண்டியே சேவை வடிவாக
வேலவனும் ஆட்கள் தேர்வு
தொண்டுவழி உலகம் எங்கிலும்
தொண்டர்களை உருவாக்கி வர
5. வருகின்ற இந்த வழிமுறைகள்
வழிமொழிந்து உலகம் எங்கிலும்
பெருகி வந்தாலே போதுமப்பா
பேருலகம் தானாக மாற்றம் காணும்
6. காணுகின்ற கலியின் கஷ்டமான
கருமா வழி உலகத் துன்பங்கள்
தானாக விலகி ஓடுமப்பா
தரணியில் பாதுகாப்பு கூடுமப்பா
7. அப்பனே எங்கும் அமைதியும்
ஆன்மீக பலம் கொண்டநல்
காப்பான ஞானவான்கள் படை
கலியினை விரட்டும்படி உருவாகி
8. உருவாகி அற்புதம் நிகழும்
உலகமாற்றமாக இனிதே அரங்கன்
குருவருள் சக்தி வழிதனில்
குவலயம் தேற்றம் காண்கும்
9. காண்கவே ஞானத் தலைவன்
கந்தவேலன் தேர்வு செய்து
ஆன்மீகம் கலியினில் வளர்க்க
அனுப்பிய ஞானி அரங்கனே எனும்

(உலகத்தில் உண்மை ஆன்மீகத்தை பரப்பி வளர்க்கவே ஞான தலைவன் முருகப்பெருமானால் அனுப்ப பட்டவர்தான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகர்)

10. எனும் சூட்சுமம் உலகோர்க்கு
ஏழாம்படைவீட்டுக்கு வர புரியும்
ஞானமே அரங்கன் வழிதான்
நம்பினால் ஞானி ஆவோமெனும்

11. எனும் திடமும் உள்ளே பெருகி
இலகுவாய் திருவருள் அடைய நேரும்
ஞானவான்களாக உலகில் ஞான ஆட்சி மலரும்
நாட்டிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

உண்மை ஆன்மீகம் என்பது உயிர்கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்த சைவ உணவினை மேற்கொண்டு முருகப்பெருமான் திருவடியை "ஓம் சரவணஜோதியே நமோ நம" என்றோ "ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி" என்றோ உள்ளம் உருக பூசித்து குறைந்தபட்சம் வாரம் ஒரு பசித்த ஏழைக்காவது அன்னதானம் செய்து வருவதே உண்மை ஆன்மீகம் ஆகும்.